*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# பத்துப்பாட்டு ஆற்றுப்படையில் மீசமூகக் கருத்தாக்கம்

**ப.அருணாதேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*பண்டையக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையானது இயற்கையுடன் சார்ந்திருந்தது. இயற்கையின் பேராற்றலுடன் போராடி வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆகைனால் மனிதஇனம் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவும், மற்ற இனங்களின் தாக்குதல்களிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ளவும், அவ்வினம் மேற்கொள்ளவும் நம்பிக்கைகளே அடிப்படைகளாக அமைகின்றன. பெரும்பாலன நம்பிக்கைகள் விழாக்களாகவும், சடங்குகளாகவும் வடிவம் கொள்கிறது. அந்த வகையில் எதிர் அமைப்பியம் கோட்பாட்டின் மூலமாக பத்துப்பாட்டு ஆற்றுப்படையில் மீசமூகக் கருத்தாக்கம் முறையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**எதிர் அமைப்பியம்:**

அமைப்பியத்தின் ஒரு பகுதியாக விளங்குவது எதிரிணை ஆகும். இந்த எதிரிணை தான் எதிர் அமைப்பியம் என அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக கூற வேண்டுமென்றால், கருப்பு X வெள்ளை, நாடு X காடு, சொர்க்கம் X நரகம், நல்லது X கெட்டது. இவ்வாறு ஒரு அமைப்பிற்கு எதிரிணையாக அமைவது எதிர் அமைப்பியம் எனப்படும்.

- ❖ எதிரிணையை மையப்படுத்தி அமைப்பின் கட்டுமானத்தை அறியமுடிகிறது.
- ❖ அமைப்பு ⟶ எதிர்அமைப்பு வாயிலாகப் புரிந்து கொள்ளும் அணுகுமுறையை முன்வைக்கிறது.
- ❖ எதிர் அமைப்பியம் எதிர் என்னும் சொல் முழுமையாக எதிர்மைத் தன்மையுடையது அல்ல.

என்று ஒரு கருத்தில் முரண்பட்ட ஒரு நிலையைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப் படவில்லை என்று டர்னர் விளக்குகிறார்.

மீவியல் (லிமினல்) பண்பைத் தாங்கிய எதிர் - அமைப்பு என்பது அதன் மீவியல் பண்புக்கு எதிராக உள்ள இயல்பான அமைப்பிலிருந்து பெறக்கூடியதாக இருக்க வேண்டும்.”[1] என்பார் டர்னர். அதனாலேயே “டர்னர் (anti) என்பதை எதிர்நிலைப்பண்பு என்று பொருள் கொள்ளலாகாது என்பதற்காக சில இடங்களில் மெட்டா (meta), கவுன்டர் (counter), எக்ஸ்ட்ரா - ஸ்ட்ரக்சுரல் (extra – structural) என்னும் தொடர்களை பயன்படுத்தியுள்ளதையும் அறியமுடிகிறது

**மீசமூகக் கருத்தாக்கம்**

மீசமூகம் என்பது இயல்பான சமூகத்திலிருந்து (அமைப்பு உலகம்) விலகிச் சடங்குக் களத்தில் ஒன்று சேருவர். இவ்வாறு ஒன்று சேரும் மீவியலர்கள் உருவாக்கும் ஓர் இயல்பு மீறிய சமூகத் தன்மையைக் குறிக்கும். இயல்பு மீறிய சமூகத்தின் மூலம் கிடைக்கக்கூடிய ஒன்றியத்தையும் அதன்வழி கிடைக்கும் கூட்டாற்றலையும் ‘மீசமூகம்’ கருத்தாக்கமாகும்

⇒ மீவியல் சடங்கில் பங்கேற்கும் பங்கேற்பாளர்களில் எந்தவித முதற்காரணமின்றி மிகவும் எதேச்சையாக எழக்கூடிய உறவாகும்.

டர்னரின் சடங்கியல் மானிடவியலில் மீவியல் களம், மீவியல் காலம், மீவியல் மனிதர் என்னும் வரிசையில் லிமினல் என்ற சொல்லை இணைத்துப் பல கருத்தாக்கத் தொடர்கள் வழங்கப்படுவதால் 'மீவியல்' என்னும் சொல் தமிழில் அனைத்துத் தொடரில் அமைப்புகள், சொல்லாட்சிகள், மேலும் கருத்தியல் தொடர்ச்சிக்கும் ஈடுகொடுக்கக்கூடியதாக அமைகிறது. மீவியல் கருத்தாக்கத்தை டர்னர் பின்வரும் நிலைகளில் விளக்குகிறார்.

- ❖ மீவியல் களம்,
- ❖ மீவியல் காலம்,
- ❖ மீவியல் மனிதர்,
- ❖ மீவியல் இடங்கள்.

டர்னரின் சடங்கியல் மானிடவியலில் liminal space, liminal time, Liminal person என்னும் வரிசையில் liminal என்ற சொல்லை இணைத்துப் பல கருத்தாக்கத் தொடர்கள் வழங்கப்படுவதால் 'மீவியல்' என்னும் சொல். எல்லா கருத்தியல் தொடர்ச்சிக்கும் ஈடுகொடுக்கக்கூடியதாக அமைகிறது.

**மீவியல்பாற்றல்:**

மீவியல்பாற்றல் என்பதை "தன்னை மீறிய, இயற்கை நிலைக்கு மீறிய ஆற்றல் எனக் குறிப்பதுண்டு. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் என்பது இயற்கை நிலையில் காணப்படாத தெய்வீக நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகும். தெய்வங்களின் செய்கைகளும் தெய்வச் சார்பான நிகழ்ச்சிகளும் மக்கள் வாழ்வில் நேரடியாகக் காணப்படாமல் இயற்கை வாழ்விற்கு அப்பாற்பட்டவை[2] எனக் கருதப்படுகிறது. இக்கருத்துப்படி தன்னை மீறிய தன்மையோடு இயற்கைக்கு அப்பாற்பட்டவை எல்லாம் மீவியல்பாற்றல் என்று அமைகிறது.

**அணங்கு, சூர் :**

தமிழர்களுக்கு உரிய தொன்மையான வழிப்பாட்டில் இடம் பெறும் அணங்கு, சூர் என்னும் தெய்வம் மக்களை அச்சுறுத்தும் தெய்வமாக நம்பப்பட்டது. "அணங்கு என்னும் சொல் 'வருத்தம்' என்னும் பொருள் தருகின்றது. இச்சொல் வினைச்சொல்லாகும் போது ' வருத்து' என்னும் பொருளைத் தருகின்றது."[3]

சூர் என்னும் சொல் 'அச்சம்' என்னும் பொருளைத் தருகின்றது. இச்சொல் வினைவடிவம் பெறும் போது, 'கொடுமை செய்' என்ற பொருளை உணர்த்துகிறது."[4]

**சூரர மகளிர்:**

மலைகளிலும் மலைச்சாரல்களிலும் தெய்வமகளிர் உறைவதாகத் தமிழ் மக்கள் நம்பினர். இவர்கள் சூரரமகளிர். வரையர மகளிர் எனப் பெயர் பெறுகின்றனர். சூரர மகளிர் பலரும் ஒன்றாகக் கூடி ஆடிப்பாடுவது பற்றிய விரிவான வருணனை திருமுருகாற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது. சூரர மகளிர் தம் சிவந்த அடிகளில் கிண்கிணிகளை அணிவர். மூங்கில்கள் போன்ற மெத்தென்ற தோள்களை உடைய மேனியில் இந்திர கோபத்தின் நிறத்தை ஒத்த சிவந்த பூ வேலைப்பாடு மிக்க ஆடையை அணிந்து, பல மணிகளால் கோர்க்கப்பட்ட மேகலையை இடையில் அணிவர். பின்பு 'சாம்பூநாதம்' என்று சொல்லப்படும் உயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களையும் அணிந்துள்ளனர். அவர்களுடைய தெய்வீக ஒளி விண்ணுலகத்தையும் கடந்து செல்கின்றது. மலர்களாலும் அணிகலன்களாலும் தம்மை அலங்கரித்துக் கொண்டு மலைப்பக்கம் எல்லாம் எதிரொலிக்கும்படி அவர்கள் முருகன் புகழைப் பாடிக் கொண்டு ஆடுகின்றனர் (திரு12-41) என்பதை நக்கீரர் புலப்படுத்தியதன் வாயிலாக அறிய முடிகிறது.

மானுடவியலார் தெய்வங்களின் பண்புகளாக நன்மை செய்தலையும், தீமை செய்தலையும் விளக்குவர். இத் தெய்வங்களைப் புறக்கணித்தால், அவை சீற்றம் கொண்டு மக்களுக்குத் துன்பங்கள் செய்கின்றன. அவற்றுக்குப் பலி கொடுத்து அவற்றை மகிழ்வித்துச் சாந்தப்படுத்தினால், தம்மை வழிப்பட்டவர்களுக்கு அவை நன்மைகளைச் செய்கின்றன எனச் சங்கப் பாடல்களிலிருந்து அறிய முடிகிறது.

**பேயும் மனிதத் தன்மையும்:**

பேயின் உருவம் மனித உருவின் அடிப்படையில் அமைந்த விகாரமிக்க பெரிய உருவத்தினை உடையதாகவே இலக்கியச் சான்றுகள் கொண்டு அறியலாம்.

**உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்**
**சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்**
**கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்**
**பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்டு**
**உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்** (திரு. 47-51)

பேய் பெரும்பாலான இலக்கியங்களில் பெண்ணாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. இது கூளி, பேய்மகள் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**எரிமறிந் தன்ன நாவின், இலங்கெயிற்று,**
**கருமறிக் காதின், கவையடிப் பேய்மகள்** ( **சிறு. 196-197)**

என்ற பாடலில் பேயின் வருணனையை அறிய முடிகிறது.

**பேய் மகளிர் - துணங்கைக் கூத்து**

திருப்பரங்குன்றம் என்ற பகுதியில் முருகனுக்கு பேய் மகள் ஒருத்தி ஆடிய கூத்து துணங்கைக் கூத்தாகும். அவள் தலைமயிர் காய்ந்து கிடக்கும். காதுகளில் வெள்ளாட்டுக் குட்டிகள் காதணியாக தொங்கும். கோபத்தாற் சுழலும் விழியையுடைய பசிய கண்ணை உடையவளாயிருந்தாள். முருகப் பெருமான் அவுணர்களை வெற்றிக் கொண்ட போர் களத்தைப் பாடித் தோலை அசைத்து நிணத்தை தின்கின்ற வாயினை உடையவளாய் துணங்கைக் கூத்து ஆடினாள்.

**“வென்று அடு விற்றகளம் பாடி, தோள்பெயரா,**
**நிணம் தின் வாயள் துணங்கை தூங்”** **(திரு. முரு.55-56)** பேய்கள் மாறுப்பட்ட உருவங்கள் உடையவை சில பேய்கள் குள்ளமானவை அப் பேய்களை ‘**கூளி**’ என்பர்.

**“ வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்”** **(திரு.முரு.282)**

பேய் மகளிர் தொடர்பான செய்திகளை விரிவாக ஆராய்ந்த க.கைலாசபதி, “பேய் மகளிர் உண்மையில் பழங்காலச் சமூகத்தில் வளமைச் சடங்குகளை நடத்திய பெண் மாந்திரீகர்கள் என முடிவு கட்டுகின்றார்.” அவற்றின் கூற்றிற்கிணங்க பேய் மகளிரின் செயல்பாடுகள் அமைந்து இருப்பதை திருமுருகாற்றுப்படை பாடல்களின் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாறு பேயானது அச்சம் தரக் கூடிய மனித உருவத்தோடு இணைத்தே படைக்கப்பட்டுள்ளது. எனவே பேய் என்பது கட்புலனுக்கு அப்பாற்பட்ட அருவ நிலையில் வாழக் கூடியதாகவே படைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**மீவியல் களம் :**

குறமகள் நிகழ்த்தும் முருக வழிபாடு அச்சம் தரத்தக்கதாக உள்ளது. வெறியயர் களத்தில் வெள்ளைக்கடுகை அரைத்து(ஐயவி) நெய்யோடு கலந்து பூசுதல் மற்றும் விரதம் மேற்கொள்ளும் மகளிர் சிவப்பு நூலைக் காப்புக் கட்டுதலும், மாறுபட்ட நிறமுடைய இரு ஆடைகளை அணிவதும் உண்டு. கொளுத்த ஆட்டுக்கிடாவை வெட்டி அதன் இரத்தில் தூய வெள்ளரிசியைக் கலந்து வெறியாட்டுக் களத்தில் தூவுதல். இசைக்கருவிகள் பல ஒலிக்க, மஞ்சள்,சந்தனம் தெளித்து, பக்கள் பலவற்றைத் தூவி, அதற்கிடையில் அச்சம் தரத்தக்க வகையில் குருதி கலந்த செந்தினையைத் தூவுகின்றன.

**“இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க**
**உருவப் பல்பூத் தூஉய், வெருவரக் குருதிச் செந்தினை பரப்பிக்,குறமகள்”** **(திரு.முரு.240–242 )**

சிவப்பு நிறம் ஆபத்தின் அறிகுறி என்ற மக்களின் நம்பிக்கையும் இங்குக் குறிக்கத்தக்கதாக அமைகிறது. மக்களுக்கு தெய்வத்தின் மீது அச்சம் வர வேண்டும் என்ற அடிப்படையிலே ‘குருதிச் செந்தினைப் பரப்புதல்’ என்னும் நிகழ்வு அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறியலாம்.

**மீவியல்பாற்றல் வழிபாட்டுச் சடங்குகள் :**

சங்க இலக்கியத்தில் மீவியல்பாற்றல் கூறுகளாக அணங்கு, சூர், பேய் ஆகியவை குறிப்பிடபாட்டுள்ளன. அவை மரம், மலை, நீர் நிலைகள் முன்றில் போன்றவற்றில் உறைகின்றன என்று நம்பி சடங்குகள், படையல்கள் நடத்தப்பட்டன. இதனை மீவியல்பாற்றல் வழிபாட்டுச் சடங்குகள் என்று கூறலாம்.

மீவியல்பாற்றல் வழிபாடு கண்ணிற்குப் புலப்படாத பொருள்கள் மீது கொண்ட பற்றின் காரணமாக அவற்றை வணங்குதலாகும்.

போரில் இழந்தவருடைய செயற்கரிய செயல்கள் நடுக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் அவர்கள் பயன்படுத்திய போர்க் கருவிகளும் வணங்கப்பட்டன. வீரர்களுக்காக கற்கள் நிறுத்தப்பட்டு அவற்றின் அருகில் கேடயங்களும், ஈட்டிகளும் வைத்து வணங்கப்பட்டதை,

**கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி**
**நடு கல்லின் அரண் போல**
**(பட்டினப்பாலை 78-79)**

இவ்வடிகளின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

தொகுப்புரை:

வாழ்க்கையின் மீது அவன் கொண்ட அச்சம், வாழ்க்கை நிலை பெற அவன் செய்த சடங்கு இவை இரண்டுமே தெய்வச் சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்தன.

பேய் குறித்த அச்சம் பெண்ணாதிக்கச் சமுதாயச் சூழலும் சேர்த்து தாய்த் தெய்வ வழிபாட்டுக்கு வித்திட்டது எனலாம்.

கட்டுவிச்சி, வேலன் ஆகியோர் பேராற்றலைக் கட்டுப்படுத்தும் தன்மை உடையவராகக் கருதப்பட்டனர்.

அணங்கு என்னும் கூறு அபாயத்தை விளைவிக்கக் கூடிய புனிதச் சக்தியாகக் கருதப்பட்டது. அச்சக்தி மனிர்கள் மீதும் பொருட்களின் மீதும் உறையக் கூடியது. ஆகையால், புனிதப் பொருள் வழிபாடு தோற்றம் பெறலாயிற்று.

**அடிக்குறிப்புகள்:**

1. பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள் ., பக் 238
2. ஔவை துரைசாமிபிள்ளை, சிலப்பத்காரமும இயற்கைக்கு
3. அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளும்,- பக் 257
4. தமிழ் லெக்சிகன் ப. (51)
5. தமிழ் லெக்சிகன் ப. (1565)